கொரிந்தியர் 1 13:4-5

தேவசிநேகமோ பொறுமையுள்ளது, தயவுள்ளது. தேவசிநேகம் பொறாமைப்படாது, துடுக்காய்ச் செய்யாது, அகங்காரப்படாது. பெருமையைத் தேடாது, சுயநலத் தை விரும்பாது, கோபங்கொள்ளாது, தீங்கு நினையாது.

பிலிப்பியர் 2:3

யாதொன்றையும் பிடிவாதத்தினாலாவது, வீண் மகிமையினாலாவது செய்யாமல், தாழ்ச்சியோடு ஒருவரையொருவர் தனக்கு மேற்பட்டவர்களென்று எண்ணிக்கொள்ளுங்கள்.

கொரிந்தியர் 1 10:24

அவனவன் தன் சுய பிரயோசனத்தைத் தேடாமல், பிறனுடைய பிரயோசனத்தைத் தேடக்கடவான். (1 கொரி. 10:33; உரோ. 15:2.)

இயாகப்பர் பொது நிருபம் 3:16

வைராக்கியமும் வாக்குவா தமும் எங்கே உண்டோ, அங்கே நிலையின்மையும், சகல துர்க்கிரியை யும் உண்டு.

பழமொழியாகமம் 11:25

நன்மையை ஆசிக்கிற ஆன்மா பூரணமடையும்; (மற்றவர்களைப்) பூரிக்கச்செய்கிறவன் தானும் பூரிக்கப் படுவான்.

உரோமாபுரியார் 1 15:2

உங்களில் ஒவ்வொருவனும் நல் விருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி பிறனுக்குப் பிரியமாக நடக்கக்கடவான்.

பழமொழியாகமம் 18:2

அவன் மனிதன் இச்சையின்படி நீ பேசாவிடில், மதிகெட்டவன் விவேகத்தின் வார்த்தைகளை ஏற்றுக்

கொள்ளான்.

அர்ச். மாற்கு சுவிசேஷம் 12:31

இதற்குச் சரியொத்த இரண் டாம் கற்பனை ஏதென்றால்: உன்னைப் போல உன் பிறனையுஞ் சிநேகிப்பா யாக, என்பதாம். இவைகளிலும் பெரி தான வேறே கற்பனை இல்லை என்றார். (லேவி. 19:18; மத். 22:39; உரோ . 13:9; கலாத். 5:14; இயா . 2:8.)

கொரிந்தியர் 1 3:18

ஒருவனும் தன்னைத்தான் ஏய்க்க வேண்டாம். இப்பிரபஞ்சத்தில் உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று நினைத்தால், அவன் ஞானியாயிருக்கும்படிக்குப் பைத்தியகாரனாகக் கடவான்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 20:24

ஆயினும் அவைகளில் யாதொன் றிற்கும் நான் பயப்படுகிறதுமில்லை; என்னைப்பார்க்கிலும் என் உயிரைப் பெரிய காரியமாக எண்ணுகிறதுமில்லை. சர்வேசுரனுடைய கிருபையின் சுவிசேஷத்துக்குச் சாட்சியஞ் சொல்லும்படி ஆண்டவராகிய சேசுநாதரிடத்தில் நான் பெற்றுக்கொண்ட பிரசங்கத் தொழிலை யும் நிறைவேற்றி, என் ஷஜீவிய அயனத் தையும் முடிப்பேனாகில் அதுவே போதும்.

சங்கீதங்கள் 119:36

கலாத்தியர் 2:20

நான் ஷஜீவிக்கிறேன்; ஆனாலும் நானல்ல; கிறீஸ்துநாதர்தான் என்னில் ஷஜீவிக்கிறார். ஏனெனில் நான் இப்போது சரீரத்தில் ஷஜீவிக்கிறதோ, இது என்னைச் சிநேகித்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவசுதனைப் பற்றும் விசுவாசத்தினாலே ஷஜீவிக்கிறேன். மூழுமூ 20. மனுஷ உயிர் என்னிடமிருந்தபோதிலும், சேசுக்கிறீஸ்துநாதர் தம்முடைய இஷ்டப்பிரசாதத்தினாலே என்னிடம் வசித்து, என் நினைவு பற்றுதலெல்லாம் ஆண்டு நடத்திவருவதால், அவரே என்னிடத்தில் ஷஜீவிக்கிறார் என்று அர்ச். சின்னப்பர் சொல்லுகிறாரென்றறிக.

அர்ச். மாற்கு சுவிசேஷம் 8:34

பின்னும் அவர் தம்முடைய சீஷர் களோடு ஷஜனக்கூட்டத்தை வரவ ழைத்து, அவர்களுக்குத் திருவுளம் பற்றி னதாவது: யாதொருவன் என்னைப் பின்சென்றுவர விரும்பினால், தன்னைத் தானே பரித்தியாகஞ் செய்து தன் சிலு வையைச் சுமந்து கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவான். (மத். 10:38; 16:24; லூக். 9:23; 14:27.) மூ 34-ம் வசனத்துக்கு மத் 10-ம் அதி 38-ம் வசனத்தின் வியாக்கியானங் காண்க.